2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஉ) தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2020), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 6 மாதங்களுக்கு ஒருமுறை* Marketing Committee-*யினுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்து வருகின்றீர்கள்.* Marketing Committee *என்பது தலைவர்,*

@16-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. எஸ். ஆஸ்டின்] [2020 செப்டம்பர் 16

உறுப்பினர்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட கிட்டத்தட்ட 18 பேர்களைக் கொண்ட குழுவாக இயங்குகின்றபொழுதுதான் அந்த Department-க்கே development இருக்கும். ஆனால் இன்றைக்கு நீங்கள் அவற்றையெல்லாம் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்து 6 மாதங்களுக்கு ஒருமுறை பதவிக் காலத்தை பல ஆண்டு காலமாக நீட்டித்து வருகின்றீர்கள். இதனால் வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்கள், குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். Department-ல் எந்த development-ம் இல்லை. என்ன காரணத்திற்காக தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 6 மாதங்களுக்கு ஒருமுறை நீட்டித்து வருகின்றீர்கள்? தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அங்கு இருந்தால்தான் Department-க்கும் development இருக்கும், விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். யாருக்குமே இதனால் எந்த நன்மையும் இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாமல் இருக்கின்ற காலத்தில் தனி அதிகாரிகளை நாம் நியமிக்கின்றபொழுது எந்த அளவுக்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டார்களோ அதேபோல இன்றைக்கு தனி அதிகாரிகள் பதவிக் காலம் நீட்டிப்புக் காரணத்தால் விவசாயிகளும், வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், முதலமைச்சர், அமைச்சர்கள் இருக்கக்கூடிய ஓர் அமைச்சரவை இருப்பது நாட்டுக்கு நல்லது; அதையெல்லாம் கலைத்துவிட்டு கவர்னர் ஆட்சியைக் கொண்டுவந்து வைத்தால், அந்த கவர்னரால் அதை நிருவகிக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தனி அதிகாரி என்பது ஒரு கவர்னர் ஆட்சி போலத்தான். அடிப்படையில் எந்த development-ம் இருக்காது; எந்த வளர்ச்சியும் இருக்காது. குறிப்பாக மக்கள்மீது அக்கறைகொண்டு பணியாற்றக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்போல செயல்பட முடியாது. Department வளர்ச்சி இல்லையெனில் அது ornamental Department-தான். தனி அதிகாரிகள் காலத்தில் ஒரு காட்சிப் பொருளாகத்தான் அந்த Department காட்சியளிக்கின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் இருந்த காலத்தில்தான் வியாபாரிகளுக்கும் வளர்ச்சி; Department develop ஆனது. விவசாயிகளுக்கும் பயன்பட்டது. எனவே, இந்தக் காரணங்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த சட்டமுன்வடிவுக்கு எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்கிறோம்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், சரியான எடையினை உறுதிப்படுத்தவும், விற்பனைக்குப்பின் விவசாயிகளுக்கு உடனடியாகத் தொகை கிடைக்கவும், அவர்களுக்குத் தேவையான பணிகளைச் செய்வதற்கும் தமிழகத்தில் 26 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 282 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 1987 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் 1991 ஆம் வருடத்திய விதிகள் ஆகியவற்றின்படி செயல்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் எடுத்துவரும் விளைபொருட்களை விற்பனைக் குழுவிடமிருந்து உரிமம் பெற்ற வணிகர்கள் பார்வையிட்டு அதற்குரிய விலையினை மறைமுக ஏலமுறையில் கோருகின்றனர். இவ்வாறு வணிகர்களால் கோரப்படும் அதிகபட்சத் தொகைக்கு விவசாயிகள் விற்பனை செய்திட விரும்பினால் மட்டுமே, விற்பனை செய்வதற்கான பணிகள் நடைபெறுகின்றன. அவ்வாறு விவசாயிகள் விற்பனை செய்ய விரும்பும் விளைபொருட்கள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடப் பணியாளர்கள் கண்காணிப்பில் விவசாயிகளின் முன்னிலையிலேயே எடை போடப்படுகின்றன. விளைபொருட்களுக்கான தொகையினை விவசாயிகள் பெற்றபின்னர், அதிக விலை கோரிய வணிகர்களுக்கு அந்த விளைபொருள் வழங்கப்படுகிறது. மொத்த விற்பனைத் தொகையில் ஒரு சதவிகிதம் மட்டும் விற்பனைக் கட்டணமாக வணிகர்கள், விற்பனைக் குழுவுக்குச் செலுத்துகின்றனர்.*

பிற்பகல் 3–55

வேளாண் விளைபொருள் விற்பனையில் மின்னணு வர்த்தகம், ஒற்றைமுறை விற்பனைக் கட்டணம் வசூலித்தல் மற்றும் ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சீர்திருத்தங்களைக் கொண்டுவர மத்திய அரசு உத்தேசித்து, அதற்கான உத்திகளை வகுக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசின் மேற்காணும் பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழக விவசாயிகள் மற்றும் வணிகர்களின் நலன்

கருதி தமிழக அரசு பின்வரும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்தது:

2017 ஆம் ஆண்டு பிப்ரவரியில், சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலுடன் 1987 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொண்டது.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கணினிமூலம் விளைபொருட்களுக்கு வணிகர்கள் விலையினை பதிவு செய்திட ஏதுவாக மின்னணு வர்த்தக முறை மேற்கொள்ளுதல்.

2. வணிகர்கள் விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மட்டுமே விற்பனைக் கட்டணத்தினை வசூலிப்பதற்கு ஏதுவாக ஒற்றைமுறை விற்பனைக் கட்டணம் வசூலித்தல்.

3. வணிகர்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருட்களைக் கொள்முதல் செய்கின்றனர். இதற்காக ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும் தனித் தனியே உரிமம் பெற்று வந்தனர். இதனால் வணிகர்களுக்கு ஏற்படும் சிரமத்தினை போக்கிட ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் வழங்குதல்.

இந்தச் சட்டத் திருத்தம்மூலம் அதிக அளவில் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன்பெற்று வருகின்றனர். வேளாண் விற்பனைச் சட்டம் நடைமுறையில் உள்ள இதர மாநிலங்களில் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட விற்பனைக் கூடங்களில் மட்டுமே விளைபொருட்களை விற்பனை செய்திட வேண்டும்; வணிகர்களும் அந்த விற்பனைக் கூடங்களில் மட்டுமே விளைபொருட்களை கொள்முதல் செய்திட வேண்டும் என்பது கட்டாயம். ஆனால், தமிழ்நாட்டை பொறுத்தவரை, விவசாயிகள் அவர்கள் விரும்புகின்ற இடத்தில் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கும், அதேபோல வணிகர்களும் அவர்கள் விரும்புகின்ற இடத்தில் விளைபொருட்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கும் உகந்த சூழ்நிலை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் வேளாண் விளைபொருள் விற்பனையில் மேலும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக கடந்த 2017 ஆம் ஆண்டில் மாதிரி வேளாண்மை விளைபொருட்கள் மற்றும் கால்நடை விற்பனைச் சட்ட வரைவு ஒன்றை மாநில அரசுகளுக்கு

2020 செப்டம்பர் 16] [திரு. இரா. துரைக்கண்ணு]

மத்திய அரசு அனுப்பி வைத்தது. இந்தச் சட்ட வரைவில் பின்வரும் முக்கிய சீர்திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன:

வேளாண் விற்பனையில் தனியார் சந்தைகளை ஊக்குவித்தல்;

விளைபொருட்கள் சேமித்து வைக்கப்படும் கிடங்குகள், குதிர்கள், குளிர்சாதனக் கிடங்குகளை சந்தைகளாக அறிவித்தல்;

நேரடி விற்பனை மையங்களை உருவாக்குதல் விவசாயிகள், நுகர்வோர் சந்தைகளை உருவாக்குதல்.

விவசாயிகள் பயன்பெற்றிட மேற்சொன்ன மத்திய அரசின் பரிந்துரைகளை செயல்படுத்திட தற்போது நடைமுறையில் உள்ள 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் ஆகியோரின் பணிகள் மற்றும் அதிகாரங்களை வரையறை செய்திடவும் அரசால் திட்டமிடப்பட்டது. இந்நிலையில் விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலம் 29-5-2020 உடன் முடிவடைய இருந்த நிலையில், கொரோனா நோயின் தாக்குதல் இருந்த காரணத்தினால் புதியதாக விற்பனைக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்திட காலதாமதம் ஏற்படும் என்ற காரணத்தினால் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தினை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்திடவும் அரசால் முடிவு செய்யப்பட்டது. எனவே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் நடைபெறாத நிலையில் மேற்கூறிய தனியார் சந்தைகளை ஊக்குவித்தல், கிடங்குகள், குதிர்கள், குளிர்சாதனக் கிடங்குகளை சந்தைகளாக அறிவித்தல், நேரடி விற்பனை மையங்களை உருவாக்குதல் உள்ளிட்ட சீர்திருத்தங்களை உள்ளடக்கியும், அதிகாரங்களை வரையறுத்தல், நீட்டிப்பு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியும் 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் 2020 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த அவசரச் சட்டம்

[திரு. இரா. துரைக்கண்ணு] [2020 செப்டம்பர் 16

29–5–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. தற்போது சட்டமன்றப் பேரவை கூடியுள்ளதால், மேற்படி அவசரச் சட்டத்திற்கு, இச்சட்டப் பேரவையின் ஒப்புதல் பெற்று, அதன் அடிப்படையில் 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும்பொருட்டு வரைவு திருத்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு பேரவையின் ஒப்புதலுக்காக அறிமுகப்படுத்த விழைகிறேன். தற்போது கொரோனா பாதிப்பு காரணத்தினால் விற்பனைக்குழு உறுப்பினர்கள் உடனடியாக நியமிக்கப்படவில்லை. தற்போது தனி அலுவலர்கள், துணை இயக்குநர்கள் (பணிகள்) பொறுப்புகளைக் கூடுதலாக கவனித்து வருவதால் இதில் குறைபாடுகள் எதுவும் எழவில்லை. இனிவரும் காலத்தில் இதுகுறித்து குறித்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசி, ஆலோசித்து தக்க முடிவு எடுக்கப்படும் என்பதையும் சொல்லி, இந்த வரைவு திருத்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4-00

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.